270



மதித்தலைவர் பெரியார்

OFFICE
MAD

R34ωM79
N49
812

...வப் பண்ணை

மதித் தலைவர் பெரியார்

'தோழன்'

விலை நான்கணா

அறிவுப் பண்ணை
6, மங்கம்மாள் தெரு, மிண்ட் போஸ்ட்,
(ஏழுகிணறு)
சென்னை 1.

Acc. No. 812
Dt 26.11.77

Printed at the Model Press,
Godown Street, G. T., Madras.

அறிமுகம்

கொள்கையில் மாறுபட்டார் சிலர் திராவிடத் தலைவர் பெரியாரைத் தூற்றித்திரியும் பணியில் ஈடுபட்டுள்ளனர் சில காலமாக. "மடத்தலைவர் பெரியார்" எனும் சிறு ஏடு அந்த வகையில் தலைமை வகிக்கிறது. அதற்கு மறுப்பாகவே இதனை வெளியிடுகிறோம்.

'மதித்தலைவர் பெரியார்' எதிர்பார்ப்பதற்கு அதிகமாகவே நாட்டில் செல்வாக்குப் பெற்றுத் திகழுமென்ற பெரு நம்பிக்கை நமக்குண்டு. ஆசிரியர் நடையில் கருத்துச் செறிவும் விறுவிறுப்பும் விரவி நிற்றலை வாசகர்களே உணரலாம்

பதிப்பகத்தார்

மதித் தலைவர் பெரியார்

பேராசை :—"எத்தனை நாளைக்குத்தான் எடுபிடியாக இருப்பது? எனக்குத்தியாகத்தின் இலட்சணம் தெரியாதா? சிறையில் சிலநாளாவது நான் இருந்ததில்லையா? எதிலே நான் குறைந்தவன்? ஏடு எழுதுவேன். அடுக்குச்சொற்களிலே கொஞ்சம் பயிற்சி உண்டு. பின், ஏன் எனக்குமட்டும் தொண்டன் என்ற நிலை இருக்க வேண்டும்."

அகம்பாவம் :—"உம் ஆற்றல் அறியீர்! தமிழரின் தனித் தலைவராவதற்கே நீவிர் தகுதி உடையவர்! தலைமைப் பதவி உம்மை நாடி வருமளவும் காத்து நிற்காதீர்! வெற்றி, விழிப்போடு இருந்தால்தான் கிடைக்கும்! அதற்கான சூழ் நிலையை ஏற்படுத்த இன்றே முயலுங்கள்!"

சதிமதி :—"இதோ; நான் இருக்கிறேன். உம்மைத் தலைவர் என்று அழைக்க; அஞ்சற்க!"

பேராசை :—"நீ, ஒருவன் அழைத்து விட்டால் மட்டும் போதுமா? நாட்டுக்கு உன்மதி இருக்க வேண்டுமே, என்னைத் தலைவனாக ஏற்றுக் கொள்ள!"

அகம்பாவம் :—"நாடு, தங்களைத் தலைவராக ஏற்றுக் கொண்டாலும் கொள்ளாவிட்டாலும், நாங்கள் இருக்கவே இருக்கிறோம். தங்களுக்குத் தலைவர் பட்டம் சூட்ட. தங்கள் காது செவிடாகும் படியாகக் கூவுகிறோம். 'தலைவர்,' 'தலைவர்' என்று எழுத்திலும் நிலைநாட்டி விடுகிறோம், தங்கள் பெயருக்கு முன்பு 'தலைவர்' என்ற அடைமொழியை. பின்னர் பாருங்கள் நாடு உங்களைத் தலைவராக ஏற்றுக்கொள்ளுகிறதா இல்லையா என்பதை?"

பேராசை :—"என்னமோ, நண்பர்களே, நீங்கள் தான் திடநம்பிக்கையோடு பேசுகிறீர்கள் இவ்வாறெல்லாம், என்மீதுள்ள வாஞ்சையால். 'தலைவர்' என்ற சொல் கவர்ச்சிகரமானது தான்! அதனை அடைய எனக்கு மட்டற்ற ஆசையும் இருக்கிறது! ஆனால் தலைமைப் பதவிக்கு என்மீது பாசம் ஏற்படவேண்டுமே, அது எப்படி சாத்தியமாகும்? அதனை எவ்வாறு உங்களால் நிறைவேற்ற முடியும்?"

சதிமதி :—"போட்டியில்தானே வெற்றியும் தோல்வியும் வேறு புது வழிகாண எமக்கு ஆற்றல் அமோகம். 'ஆகட்டும்' என்று ஒருவார்த்தைச் சொல்லுங்கள், அடுத்த நிமிஷம் தாங்கள்

'தலைவர்' ஆகிறீர்களா இல்லையா என்று பாருங்கள்!"

பேராசை:—"அது என்னப்பா, நான் அறியாத புது வழி? சொல்பார்ப்போம்!"

சதிமதி:—"ஆந்திரர்களிலே சிலர் ஆர்ப்பாட்டக்காரர்களாக மாறி உள்ளார்கள். தலை நகரையே தமதாக்கிக்கொள்ள சலசலப்பு செய்கிறார்கள். தமிழர்களோ கவலையற்றவர்கள்போல் நடந்து கொள்ளுகிறார்கள். நாம் இத்தருணத்தைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். தலைமைப் பதவி தானாக நம்மை வந்தடையும்!"

பேராசை:—"ஆ! ஆ!! அருமையான ஆய்வுரை! மறந்தே போனேன்!"

அகம்பாவம்:—"என்னை மறந்துவிடாதீர்! புதிய முயற்சிக்கு எம் ஒத்துழைப்பு மிகமிக முக்கியம்! 'நீர் தலைவர், தொண்டரல்லர்' என்பதை நான் அடிக்கடி நினைவுறுத்தவேண்டும். நினைவில் வைத்துக்கொள்ளும் எமது இன்றியமையாமையை!"

பேராசை:—"உன்னை மறப்பதா? எங்கேயாவது உண்டா? என்றால் அது சாத்தியமாகுமா? உன்னைப் பிரிந்து அரை விநாடியும் இருக்கத் துணிவேனோ?"

இவ்வாறு போராட்டம் நிகழ்ந்தது ஒருவர் உள்ளத்தில் முன்பு ஒருநாள். 'தலைவர்' என்று பெயர்

சூட்டிக்கொண்டு, தான்தோன்றியாகக் கிளம்பினார் தமிழர்க்குத் தொண்டுசெய்ய என்று பசப்பிக் கொண்டு. திங்கள் இதழாக எழுத்துருபெற்றார். இரண்டானார் பின்னர். கிழமை இதழானார் மேலும் சிலநாள் சென்றபின்னர். மீண்டும் திங்கள்தொறும் காட்சி அளித்துவருகிறார்; வளர்ச்சி வேறு திக்கை நோக்கிவிட்டது.

குறள்பாவிலே இரண்டொன்று, கம்பனிலே நான்கைந்து, சிலம்பிலே சில, மேகலையில் கொஞ்சம், புறநானூற்றிலே பத்துப் பன்னிரண்டு, மனப்பாடம் செய்துகொண்டு, வாந்தி எடுத்துவந்தார் வாய்ப்பு நேர்ந்த போதெல்லாம்!

அறிஞர் அண்ணாவின் எழுத்தும் பேச்சும் புகழ்மலைக்கு அழைத்துச் செல்லும் பலகணி என்று தீர்மானித்து விட்டார். நெட்டுரு போட்டு ஒப்பித்தார் கால்புள்ளி அரைப்புள்ளி தவறாமல்; ஏமாற்றமே கிடைத்தது. தானாகத் தீர்மானித்துக் கொள்வதாலேயே வான்கோழி மயிலாகி விடுமோ? அறிவின் தன்மையும், பேச்சுத் திறமும் எவர் கொடுத்த பிச்சை என்பதை, ஆரம்பத்தில் 'பேஷ்' போட்ட சிலரும் புரிந்துகொண்டனர் சிலநாள் சென்ற பின்னர்!

கப்பலோட்டிய சிதம்பரத்தை வாழ்த்தினார், வாழ்வு பெறலாம் என்ற உறுதியோடு. தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்பாற்றப் போவதாகப் பறை சாற்றினார், போகுமிடமெல்லாம் பதவி மோகங்கொண்டு. பெற்ற பலன்—கிடைத்த பரிசு—என்ன?

பிறந்த வீட்டிலும் பகை. முன்னாள் தோழமை முறிந்துவிட்டது. அனைவருக்கும் பொதுவான தேவைகளைக் குறித்து பேசப்படும் பொது மேடைகளும், இலட்சிய நோக்கு சிறிதுமில்லாமல், சுயநல வேட்டையே பெரிதாக இருந்த காரணத்தால, அவருக்கு இடமளிக்க மறுத்து வருகின்றன. சரக்கோ மட்டம்; கிராக்கி அதிகரிப்பது எப்படி, விளம்புரம் பெரிதாக இருந்தாலும்? கட்டுச்சோறு நான்குநாள் சென்ற பின்னர் ஊசி நாற்ற மெடுத்துத்தானே போகும்?

முன்னாள் ஆச்சாரியார் ஆட்சியில் ஏற்பட்ட இந்தி எதிர்ப்பின்போது, இவர் செய்த திருப்பணி தமிழ்த் தாயை சித்திரவதை செய்தது இன்று கிளம்பிவிட்டார் தாயின் மானத்தைக் காக்க. முதல் தரமான முரண்பாடு. காலத்துக்கேற்ற கோலம்.

கோவையில் மூக்குடைந்தது. இவருடைய தலைக்கு வேலை இல்லாமலே தலைநகர் தப்பிவிட்டது. வாய்க்கும் ஓய்வு கிடைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. கைக்கும் கூடிய விரைவில் வேலை மிச்சமாகி விடும். முரசின் முழக்கத்திற்கும் முற்றுப்புள்ளி வைக்க வேண்டியதுதான் பாக்கி இருக்கிறது.

“தமிழரசுப்படை, தமிழர்க்காகாத இந்தியை வீழ்த்தி வெற்றிகாண, புறப்பட்டுவிட்டது போருக்கு என்று முரசறைவித்தார். ‘தனித்துப் போரிடுக” என்று தாக்கீது பிறப்பித்தார் தன்மானத் தளபதி! பிறர் உழைப்பில் பெருமை பெறலாம் என்று கூடிக் குலாவிய புகழ் தேடிக்கு, தளபதியின்

கட்டளை, தர்ம சங்கடத்தை உண்டாக்கிவிட்டது. பின்பற்றுவோர் இல்லாத பெருந் தலைவர் என்ன தான் செய்வார்? இருள் கப்பியது இருதயத்தில். இருட்டிலே இருந்து உழலுகிறார்! எது செய்வது என்று தெரியாது விழிக்கிறார்! கண்களை உருட்டிப் பார்க்கிறார். மீசைக் கத்தையை, கைகளில் பலம் உள்ள மட்டும் முறுக்குகிறார். தாம் இருட்டிலே இருப்பதை அறியாது, இருட்டில் உள்ள பொருள் பிறர் கண்களுக்குப் புலனாவது முடியாதகாரியம் என்பதும் தெரியாது, குதிக்கிறார்—கூத்தாடுகிறார் அறுத்துவிட்ட கோழிபோல தமிழ்முரசார். தம் ஏவல்வழி நிற்கும இரண்டொருவரைப் பிடித்து, தமது அரசியல் சூதாட்டத்திற்கு முடிவுகட்டிவிட்ட நமது கழகத்தைத் தாக்க, ஏவுகிறார். அந்த ஆத்தி ரத்தின் விளைவுதான் 'மடத்தலைவர் பெரியார்' என்ற தூற்றல் ஏடு!

தலைமைப்பீடம் கிட்டாமல் போனாலும், முரசு கிழிந்துபோனாலும், நாக்கு துருப்பிடித்துப்போனாலும், பொறுத்துக்கொள்ளலாம். 'ஆண்டவன் கட்டளை அதுதான்! நாம் அளவிற்கு மிஞ்சின ஆசைப்பட்டோம்; அடைந்தோம் பெரு நஷ்டம்!" என்று மனதுக்கு தேறுதல் கூறிக்கொள்ளலாம், ஆனால் புதிய வெள்ளம் பழைய வெள்ளத்தையும் கொண்டுபோய் விடுவதென்றால், அதனை எப்படிப் பொறுத்துக்கொள்ளமுடியும்?

பதவி கிடைக்காமல் இருக்கலாம்; புகழை மறந்து வாழலாம்; மாலை மரியாதைகளைக்கூட இகழ்ந்து ஒதுக்கிவிடலாம்; இவ்வளவும் சாத்திய

மாகக்கூடியவைதான். இருந்தாலும் வயிறு ஒன்று இருக்கிறதே, அதனை எவ்வாறு மறந்து வாழ்வது? இந்தத் தீராப்பிரச்னையைத் தீர்த்துக்கொள்வதற்குத்தான், ஏடு கிளம்பி இருக்கிறது!

ஒரு கட்சியினர் கொண்டிருக்கும் கோட்பாடு பேசிவரும் திட்டங்கள் — அதே கட்சியினரால் நடைமுறைக்குக்கொண்டு வரப்பட்டால்தான், அது உயர்வானது — அதனையே மாற்றுக்கட்சியினர் கொண்டுவந்தால் அதன் உயர்வு குறைந்து விட்டது — என்று பேசுவது பெரும் புத்தி படைத்தவர்களின் செயலாகாது. கட்சி முத்திரை மாறி இருப்பதாலும், ஆள்மாற்றம் ஏற்பட்டிருப்பதாலும், இலட்சியம் சிறப்பிழந்து விட்டதாக, சிறிது அறிவு படைத்தவர்களும் கூறத் துணிவுகொள்ளமாட்டார்கள். வெவ்வேறு கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு இருகட்சியினராகப் பிரிந்து இருந்தபோதிலும், குறிப்பிட்ட ஒரு லட்சியத்தை இருசாராரும் ஒரே கோணத்திலிருந்து பார்க்கிற காரணத்தால் அந்த இலட்சியத்தைப் பொருத்தவரையில் இரு பிரிவினரிடையேயும் இலட்சிய ஒற்றுமை இருப்பதையும், வேற்றுமை மறைவதையும் எவரும் எளிதில் அறிந்துகொள்வர். எனவே, தாங்கள் கூறிவந்ததை முழு அளவிலோ அல்லது குறைந்த அளவிலோ பிற கட்சியினர் செயலில் கொணரும்பொழுது, கட்சிப் பாகுபாட்டைக் கருதாமல், அந்தச்செயலைப் போற்றுகின்றனர்; அதன் காரணஸ்தர்களையும் புகழ்கின்றனர். அத்துடன் தாங்கள் நீண்ட நாட்களாகக் கூறிவந்ததை நிறைவேற்றுகிறார்கள் வேறு கட்சியினர் காணீர் என்றும் மக்களுக்கு அறிவிக்

கின்றனர். அதன்விளைவாக ஒரு கட்சிக்குப் பொது மக்கள் ஆதரவும் ஏற்படுகிறது. இது குற்றமா? கட்சி அரசியல் அறிந்தவர்கள் இதனைக் குறை யாகக் கொள்ளமாட்டார்கள்.

அறநிலைப் பாதுகாப்பு மசோதாவை கொண்டு வந்தவர் ஓமந்தூரார் என்பதைநாடு அறியும். எதிர்த் தவர்கள் எவர் எவர்? எந்தெந்தப் பத்திரிகைகள் எதிர்த்தன? இன்னும் எதிர்த்துக்கொண்டு இருக் கின்றன? என்பதற்கு விளக்கம் தேவை இல்லை. நூற்றுக்குத் தொண்ணூறு பார்ப்பனர்கள் அதனை எதிர்க்கின்றனர். ஒவ்வொருவர் கூறும் காரணமும் வெவ்வேறு. காரணம் எதுவாக இருந்தபோதிலும் எதிர்ப்பதில் அனைவரும் ஒன்றுபட்டு இருக்கின்ற னர்.

'நாத்தீகம்' பேசும் நாம் இந்த மசோதாவை ஆதரிப்பது பொருத்தமா? என்று பழிச்சுமத்து கிறது அந்த ஏடு. நாம் நாத்திகம் பேசுகிறோமா இல்லையா என்பது வேறுவிஷயம். கடவுள்பெயர் கூறி பல லட்சக்கணக்கில் பாழாகும் பணத்தைக் குறைத்து, மடாதிபதிகளின் ஆணவத்தைக்குலைத்து ஏழை மக்களின் கல்விக்கும், வேறு நல்ல பல காரி யத்திற்கும் பணம் செலவழிக்கப்படும் என்னும் நிலைகண்டு மகிழ்ச்சி அடைவதற்கு, நமது நாத்தீகத் தில் இடமுண்டு.

"இப்போது ஆஸ்தீகர்கள் வருத்தப்படவில்லை; நாஸ்தீகர்கள்தான் கவலைப்படுகிறார்கள்!"

என்று ஓமந்தூரார் கூறியுள்ளதாக, அந்த ஏடு எடுத்துக்காட்டுகிறது. மசோதாவை எதிர்ப்பவர்

கள், நாத்தீகம் பேசும் நாம் அல்ல. ஆத்தீகர்கள் தான் எதிர்க்கிறார்கள். ஆனால் அவர்களைத்தான் நாத்தீகர்கள் என்று இடித்துக் கூறுகிறார் ஓமந்தூரார். மசோதாவை எதிர்ப்பவர்கள் கூறும் ஆத்தீகம் ஓமந்தூரார் கண்களுக்கும் கருத்துக்கும் நாத்திகமாகத் தென்படுகிறது—ஏன்—அவ்வாறு முடிவாகவே கூறுகிறார். நாம் அவரதுபோக்கை ஆதரிப்பதிலிருந்தே, அவர் நினைத்துக்கொண்டிருக்கும் ஆத்தீகத்திற்கும், நாம் பிரசாரம்செய்துவரும் நாத்தீகத்திற்கும் இருக்கும் வேற்றுமையைக் காட்டிலும் ஒற்றுமைதான் அதிகமாக இருக்கிறது என்று ஏற்படவில்லையா ?

ஓமாந்தூராருக்கு நாத்தீகப்பட்டம் சூட்டப்படுகிறது மசோதாவை எதிர்க்கும் ஆத்தீகர்களால். அந்த ஆத்தீகர்களுக்கு நாத்தீகப்பட்டம் தரப்படுகிறது, ஓமந்தூராரால். இதில் எவர் நாத்தீகரோ, எது நாத்தீகமோ நாம் அறியோம்! பொருள் அற்ற இருவார்த்தைகள் !

ஜனநாகயமா—சடைமுடியா ? எது ஆட்சி புரிவது ? இதுவே இன்று எழுந்துள்ள பிரச்னை. மசோதாவை நுணுகி ஆராய்ந்து பார்ப்பவர்களுக்கு இதன் உண்மை நன்குதெரியும், பதினாறுவது நூற்றாண்டில் மேல்நாட்டில் இந்தப் பிரச்னைக்கு முடிவேற்பட்டுவிட்டது. ஜபமாலையா - செங்கோலா - எது நாடாளுவது? என்று எழுந்த போராட்டத்தில் முடிவில் செங்கோல் வெற்றிபெற்றது அங்கு. போப்பின் ஆதிக்கம் குலைக்கப்பட்டது.

மதத் தலைவர்களின் ஆதிக்கத்தை அழிக்க இங்கிலாந்தில் வித்திட்டவர் பதினைந்தாவது நூற்றாண்டில் இருந்த ஜான் வைக்ளிப் என்ற பெருமகனாவார். அவரையும், அவரைப் பின்பற்றுவோரையும் தீயிலிட்டு மகிழ்ந்தனர் அன்றைய ஆட்சியாளரும் அறிவிழந்தமக்களும். பின்னர் பதினாறுவது நூற்றாண்டில் அவர் கொள்கை இறுதியாக வெற்றி பெற்றது. மணந்தவளை விலக்கி மற்றொருவளை மணந்துகொள்ள மன்னன் எட்டாவது ஹென்றி போப்பின் தயவிற்குக் காத்துக்கிடந்தான். பலன் கிடைக்கவில்லை பலநாள் கழித்தும். பதைபதைத்து போப்பின் தொடர்பை அறுத்துவிட்டான். காரணம் வேறாக இருந்தாலும் ஒரு நூறாண்டு சென்ற பின்னர் வைக்ளிப் வெற்றிபெற்றார். ஏற்பட்ட மாற்றத்திற்கு அதற்கான சூழ் நிலையைத் தோற்றுவித்தவர்கள் வைக்ளிபும், அவர்வழி வந்தவர்களும்தான் என்று வரலாற்று ஆசிரியர்கள் வகுத்துக்காட்டுகிறார்கள். நேர்மையின் இலட்சணம் இது. வைக்ளிப் கோட்பாட்டை இன்றும் மேற்கொண்டுள்ளவர்கள், எங்கள் முயற்சிதான் போப்பின் ஆதிக்கம் அழிந்ததற்குக்காரணம் என்றுகூறிக்கொள்ள உரிமை இல்லையா? பொருந்தாமல் போவதுதான் எங்ஙனம்? நேர்மையைப் பகையாகக் கொண்டிருப்பவர்கள்தான் இத்தகுபோக்கினைக் கண்டிப்பர்; கிண்டல் செய்வர். அழுக்காறு—பேரவா—அச்சம்—அனைத்தின் கூட்டுச் சரக்கால் ஆக்கப்பட்டுள்ள ஜந்துதான் எங்கள் சொல்லையும் செயலையும் நக்கல் செய்யும்!

அறநிலைபாதுகாப்பு மசோதா உருவானதற்கு தனது உழைப்புத்தான் அடிப்படையானது என்று திராவிடர் தந்தை பெரியார் பேசுவதற்கு, ஓமந்தூ

ராருக்கு இல்லாத அளவிற்கு, அவருக்கு அதிக உரிமை உண்டு. இந்த உமாகாந்தர்கள் தாயின் கருவில் தோன்ருத காலத்திலேயே, காங்கிரசிலிருந்து கடனுற்றியவர் பெரியார். முன்னுள் உழைப்பாளிதாம் அன்றே கொண்டிருந்த இலட்சியம் வெற்றி பெறுவதுகண்டு பூரிப்படையவும்; அது தமது உழைப்பின் ஒருதுளி பயன் என்று எடுத்துக் கூறவும் உரிமை அற்ருபோய்விடும், பாடுபட்ட பாட்டாளிக்கு? 'ஜே' ஒன்றுபோடுவதிலுள்ள சேவையைக்காட்டிலும், பெரியாரின் சேவையின்தரம் அதிகமானது—உயர்வானது என்பதை அறிந்து கொள்ள, இந்த ஆத்திரப்பிறவியால் முடியாது தான்!

812

பிராமணீயத்தை எதிர்த்த ஜஸ்டிஸ் கட்சி மந்திரி சபையான பானகல் அரசர் மந்திரி சபைதான் முதல் முதலாக ஒழுங்கான இந்துமத பரிபாலன சட்டம் கொண்டு வந்தது. அதனைச் சட்டமாகாமல் தடுக்க, மடாதிபதிகளும், மகந்துகளும் சல்லடம்கட்டினர். அக்கிரகாரம், ஓமந்தூராருக்கு செய்த எதிர்ப்பிரசாரத்தைக்காட்டிலும், அதிக அளவில் எதிர்த்துப்பேசிற்று. இன்றுள்ள வைத்தியநாத அய்யர் அன்று காலஞ்சென்ற சத்தியமூர்த்தி அய்யர் உருவில் உலவினர். மசோதா சட்டமாகாமல் தடுக்க அருமையான காலங்கடத்தும் உபாயத்தை மேற்கொண்டார் சத்தியமூர்த்தி அய்யர். அந்தசட்டசபை ஆயுட்காலம்முடியும் கடைசி நாளில் சட்டமாக்கப்பட்டது A. இராமசாமி முதலியாரின் அறிவாற்றலால்.

இந்த உண்மையை அப்படியே விழுங்கிவிட்டது அந்த ஏடு! அதிக சம்பந்தமில்லாதவர்களை எல்லாம் குறித்து மகிழ்கிறது. நாட்டுக்கு நலந்தேடும் நல்ல காரியங்களைப் புகழவும், அதனைச் செய்தவர்கள் பெயரை வெளியிடவும் ஏன் இந்த சிற்றினத்திற்கு மனம் வரவில்லையோ? உள்ளத்தைத் திரித்துக்கூறும் ஜன்மத்திற்கு பிறர் ஒழுக்கத்தைக் குறித்து குறைகூறவும், பிறர் செயலில் உண்மை இருக்கிறதா இல்லையா என்று ஆராயவும் உரிமைதான் ஏது? மலத்தில் ஜனித்த புழு சுகாதாரம் போதிக்கப் புறப்படுவது விசித்திரந்தான்!

'ஓமந்தூரார் மசோதாவை நாம் ஆதரித்தல் அடாதாம். அவரை, அதற்காகப் போற்றுதல் கூடாதாம். சொந்தக் கட்சிக்கு செல்வாக்குத்தேட இதனை நாம் செய்கிறோமாம்.' பிதற்றுகிறது இவ்வாறு எல்லாம். பானகல் அரசர் பெயரையும் இருட்டடித்துவிட்டு, வேறு ஒருவர் பெயரை விளம்பரப்படுத்தும் பொய்யில் புழுத்த புழுவுக்கு, அதுபோல் நாம் நடக்கத்தவறியதால் நம்மீது கோபம் தானே ஏற்படும்?

இந்துமத பரிபாலன சட்டத்தின் காரணமாகவே ஆரிய வழக்கறிஞர்கள் எவ்வளவுபேர் ஐஸ்வரியவான்களானார்கள் தெரியுமா? மடாதிபதிகளின் பணம் எவ்வளவு வாரி இறைக்கப்பட்டது தெரியுமா? சுயராஜ்ய கட்சி வெற்றிபெற அவர்கள் எவ்வளவு பாடுபட்டார்கள் தெரியுமா? அடுத்துவந்த தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சி தோற்றுப்போனதற்கு, இந்துமத பரிபாலன சட்டம் பெரிய அளவிற்குக் காரண

மர்கும். அய்யரும் அய்யங்காரும், சாஸ்திரியும் சர்மாவும் இதனையே பகையாகக்கொண்டு பானகல் கட்சிக்குப் பாதகம் தேடினர். மனங்குளிர வெற்றியும் பெற்றனர்; மடி நிறைய பணமும் பெற்றனர்!

தெருவில் நடக்கக்கூடாது என்ற தீண்டாமையின் கொடுமையை எதிர்த்து போரிட்டு, வைக்கத்தில் வெற்றிகண்ட வீரர் எம் பெரியார் என்பதை இந்த சிற்றினம் தெரிந்துகொள்ள ஆற்றல் ஏது? C. S. இரங்கையர் டில்லி சட்டசபையில் கொண்டுவந்த ஆலயப்பிரவேச மசோதாவை, ஆதரித்து, நாடெங்கும் காங்கிரஸ் சபையினரால் கையெழுத்து வாங்கப்பட்டதே அது எதற்கு? சி. எஸ். ஆர். காங்கிரஸ்போக்கை ஏற்றுக்கொள்ளாதவர் என்பதோடு காங்கிரஸ் நடவடிக்கைகளைக் கண்டித்து காரசாரமாக எழுதிவந்தவராயிற்றே? ஏன் ஆதரித்தார் காங்கிரசார்? இரங்கையர் மசோதா நன்மையானது என்பதற்கா? அல்லது சொந்தக்கட்சிக்குச் செல்வாக்குதேடவா? தீர்ப்பளிக்கும் பொறுப்பை வாசகர்களுக்கே விட்டுவிடுகிறேன்.

இந்துமதத்தைக் காப்பாற்றவும், பரிசுத்தப் படுத்தவும் காந்தியாருக்கு இருந்த ஆசைதான் தீண்டாமை ஒழிப்பு வேலையாக உருவாயிற்று. "காங்கிரசும் காந்தியும் தீண்டப்படாதோருக்குச் செய்த நன்மை என்ன?" என்று டாக்டர் அம்பேத்கார் எழுதி உள்ள நூல் ஒன்றேபோதும்

இதற்கு சாட்சி. அதற்கும் வைதீகம் அவரைவிட்டு விடவில்லை. நன்றிகெட்டத்தனமாக, அத்தூயவரை சுட்டு வீழ்த்தினன் கோட்சே!

சரோஜனி தேவியாரின் திருமணமும், இராதா பாயின் கல்யாணமும், இலட்சுமியின் மணமும் போற்றுதலுக் குரியதுதான். அருணவின் மணத்தையும் அத்துடன் சேர்த்துக் கணக்கிட்டுப் பேசினலும், நமக்கு வெறுப்பு ஏற்பட நியாயமில்லை. விரல்விட்டு எண்ணக்கூடிய நிலையில்தான் அவை உள்ளன. பாழான ஜாதி பாகுபாட்டை வெறுத்தொதுக்கும் நிலேஐய--மாற்றத்தை மக்களிடம் தோற்றுவிக்கவில்லை அந்த உயர்ந்த நிகழ்ச்சிகள். ஆனல் நமது இயக்கம் செய்த பெரும் புரட்சியுடன் இவைகளை ஒப்பிடுவோமேயானல், கடலிலே பெருங்காயம் கரைத்த கதையாகத்தான் முடியும். பிறவியில் உயர்வு தாழ்வு பேசும் பேதமையைப் போக்குவதில், நமக்குள்ள பல எதிர்ப்புகளுக்கு மிடையில் நாம் பெற்றுள்ள வெற்றி, நம்பிக்கையை யூட்டக்கூடியதே அன்றி, மனமுடையச் செய்யக்கூடியதன்று.

பிராம்மணீயந்தான் நமது பகை. நமக்கு மட்டுமல்ல, அது மனித சமுதாயத்திற்கே கேட்டினை பயக்கும் ஒரு கோட்பாடு. அதனை அழிப்பதே நமது முழு முயற்சியின் நோக்கம். தனிப்பட்ட பார்ப்பனரிடம் பகை இல்லை. மூக்காலும் இது

உண்மையாகும். அவர்கள் எண்ணிக்கைக்கேற்ப எதிலும் பங்கு பெறவேண்டும் என்பதுதான் நமது கிளர்ச்சி. மற்றவர்கள் தகுதியற்றவர்கள் என்று பேசப்படும் அகம்பாவத்தைக் கண்டிக்கவும், பார்ப் பனர் நீங்கிய பிறருக்கு திறமை இல்லை என்று பேசப்படும் பழிச் சொல்லை துடைக்கவும், பார்ப் பனர்களே எல்லாத் துறைகளிலும் எண்ணிக்கைக்கு அதிகமாக இடம் பெறுவதைக் கண்டித்துத் தடுக்க வும் வேண்டியவர்களாகிறோம்.

"அனைவருக்கும் சம சந்தர்பம்" என்பதுதான் நமது உள்ளக்கிடக்கை. இதற்காகத்தான் பார்ப் பனரல்லாதார் கட்சியின் துவக்கத் தலைவர் டாக்டர் நாயர் இங்கிலாந்தில் உயிர் நீத்தது. காலஞ்சென்ற சர் கே. வி. ரெட்டிகாரும், ஏ. இராமசாமி முதலி யாரும் கடல் கடந்து சென்று கதறியது. நாட்டு நடைமுறை தெரிந்தவர்கள், நாங்கள் பெற்ற வெற்றியை நன்கு அறிவார்கள். ஆத்திரக்காரனுக் கும் அகம்பாவிக்கும் இது தெரிவது கஷ்டந்தான்!

அன்று சட்டசபையிலே கூறினர் கனம் மந்திரி கோபால் ரெட்டியார், உண்மையான வகுப்பு வாதிகள் எவர் என்பதையும், வகுப்புவாதம் இன்னும் முழுதும் அழியாமல் இருப்பதற்கு எவர் காரணம் என்பதையும். இதோ மற்றொரு ஆதாரம், மறுக்க முடியாத நிலையில். மராமத்து மந்திரி கன்னத்தில் அறைந்ததுபோல் அன்று சென்னை

வானொலி நிலையத்தில் பேசியுள்ளார், இது குறித்து. பார்ப்பனர் என்ற வார்த்தை இல்லை. ஆனால் அவர் தீட்டிக் காட்டிய சித்திரம் உண்மையின் உருவாக, அவர் அறிந்தோ அறியாமலோ, அமைந்துபோய் விட்டது. இதோ தருகிறேன், இதன் கீழ்.

"சர்க்கார் உத்தியோகங்களிலும் கல்வித் துறைகளிலும் ஜாதி மத பட்சபாதம் காட்டு வதை கட்டாயம் ஒழித்தே தீரவேண்டும். இருந் தாலும், ஒரேயடியாக இப்படிச் செய்தால், சமுதாய சமத்துவ லட்சியத்தை அடைய முடி யாது. பலம் உள்ளவர்களை (யார்?) முன்னே நிறுத்தி, பலஹீனமானவர்களை பின்னே வெகு தூரத்தில் நிறுத்தி, ஒருமிக்க ஓட்டப் பந்தயம் விடுவதுபோல் இது இருக்கும்."

"பல்வேறு சமூகங்களிலும் பிரதேசங் களிலும் காணப்படுகிற திறமைக்கும் சாமர்த் தியத்திற்கும் சம சந்தர்ப்ப வசதிகளை அளிக்க வேண்டும்..................................இப்படிச் செய் வது சமத்துவ லட்சியத்துக்கான பாதையை நிரவல் செய்து கெட்டிப் படுத்துவதாக இருக் கும்."

"இப்படி பாதையை வகுத்து விட்டால் அப்புறம் இந்தச் சலுகைகளை நீக்கிவிடலாம். நீக்கியே ஆகவேண்டும்.. ஆனால் இப்படிப்பட்ட

ஒரு நிலைமை ஏற்படுவதற்கு முன்னதாக, எதுவும் செய்துவிடக் கூடாது. செய்தால், ஒரு மதத்தினரோ (யாவர்?) ஒரு வகுப்பாரோ (யாவர்?) பிரதேசத்தார்களோ தமது சொந்த முற்போக்கிற்காக மட்டும் கல்வித் துறையை சுரண்டிக்கொண்டு இருப்பர்.''

'தினசரி' 17—4—49

நமது இயக்கத்தின் முக்கிய கோட்பாடுகளில் ஒன்றை, இதற்காகவே நம்மைக் கண்டித்து வந்தவர்கள், ஆட்சியில் அமர்ந்ததும், நேர்மையானது என்று கொள்ளவும், அதனை செயலாற்றவும், அதற்குப் பரிவு காட்டிப் பேசவும் முற்பட்டிருப்பது, நமது இலட்சியம் வெற்றிக்கு அறிகுறிதானே! நமது இலட்சியம் சிறு அளவிலாவது வெற்றி பெறுகிறதே என்பதில் நமக்கு மகிழ்ச்சி பிறக்கத்தானே செய்யும்? நமது பாதை சரியானது, நாம் தவறான வழியில் செல்லவில்லை, மாறுபட்டவர்களும் நமது பக்கம் வருகிறார்கள் என்பதைக் காண்கின்ற பொழுது, மற்ற நமது இலட்சியங்களும் இன்று பழிப்புக்கு இடமானதாக இருந்தபோதிலும், இன்னும் சிலநாள் சென்ற பின்னர், இன்று நம்மை ஏசுபவர்கள், நமது அணிவகுப்பில் இடம் பெறுவார்கள் என்று நாம் நம்பிக்கைக் கொள்ளாமல் இருப்போமா? இதன் விளைவாக மேலும் நமது பிரசாரத்தைத் தொடர்ந்து செய்யவேண்டும் என்ற உறுதி கொள்வதும் இயல்புதானே?

'கத்தி இன்றி இரத்தம் இன்றி' போரிட்டு, ஏகாதிபத்திய அரசிடமிருந்து நாட்டு விடுதலையை பெற்று விட்டதாகச் சொல்வது முழுதும் உண்மையானது என்றே வைத்துக்கொண்ட போதிலும், அவ்வளவு பெரிய காரியம் சாத்தியமாகிறபோது, வெறும் பிரசாரத்தின் மூலம் தென்னிந்திய புகை வண்டி நிலையங்களில் இருந்த ஜாதி பாகுபாட்டை ஒழிப்பது முடியாத காரியம் என்று எவரும் கூறத் துணியமாட்டார்கள். பெரியாரும், அறிஞர் அண்ணாவும் அத்துறையில் மறுக்கமுடியாத வெற்றி பெற்றிருக்கிறார்கள். ஜாதி பாகுபாட்டை ஒழிக்க அரசியலார் உத்தரவிட்டபோது, 'இந்தியன் எக்ஸ் பிரஸ்' பத்திரிகை கேலிச் சித்திரம் தீட்டி நமது வெற்றியைக் கிண்டல் செய்திருந்ததை அனைவரும் அறிவர். இதனைக்கூட மறந்தார் இந்த ஏடு எழுதி! இதுவும் சத்திய சோதனை போலும்!

வெள்ளையர் வெளியேறின கதையும், காங்கிரஸ் ஆட்சியில் அமர்ந்த கதையும் விரிக்கின் பெருகும். பாக்கிஸ்தான் செய்ய முடியாது என்று பேசிய சூரர்கள், முடிவில் அதற்கு பணிந்து பதவி பெற்ற கூத்திலிருந்தே, இவர்களின் சுயபலத்தின் நிலையை ஒருவாறு அறிந்து கொள்ளலாம்.

பிரிட்டிஷார் விட்டுப்போன நிர்வாக இயந்திரம், பாதுகாப்புப்படை முதலிய இரண்டு சாதனங்களையும் வைத்துக்கொண்டு, 'கேட்பது வாழ்வு—

கொடுப்பது சாவு' என்ற நிலையில் ஆட்சி நடத்தி வரும் அவலத்தை அறியாதவர் யாவர்? அஹிம்சை பேசியவர்கள், படைபலம் இல்லாமல் ஆட்சி நடத்த முடியாது என்ற கெடுமதி கொண்டது ஏன்? பிறர் படை எடுப்பு—உள்நாட்டுக் குழப்பம்—முதலியவற்றை அடக்க, ஏகாதிபத்தியத்தைத் தோற்கடித்து விட்டதாகச் சொல்லிக் கொள்ளப்படும் அஹிம்சை முறை, ஆற்றல் அற்றது என்று கொள்ளக் காரணமென்ன? துவக்கமுதல் இறுதிவரை ஒரே முரண்பாடு! இந்த நிலையில் உள்ளவர்கள்தான் பெரியாரிடம் முரண்பாடு காணும் பெரும்பணியில் ஈடுபட்டுள்ளார்கள்.

ஆரிய தாசர்களாக இருந்த தமிழர்களை, தாங்களும் மனிதர்கள்தான் என்று உணரச் செய்தவர் எம்பெரியார். அதன் விளைவுதான், இழிவுபடுத்தும் பிரிவுகளை எடுத்துவிட வேண்டும் என்று கட்டளை இடும் அளவிற்குத் துணிவை கொடுத்தது ஆள வந்தார்களுக்கு. தக்க தருணத்தில் இதனைச் செய்யவில்லையானால், ஆரியரின் அகம்பாவத்தைக் கண்டு ஆத்திரம் கொண்டுள்ள தமிழர்களால், சட்டத்தின் துணை இல்லாமலே தங்களுக்குப் பலநூறு ஆண்டுகளாக இழைக்கப்பட்டு வந்த அநீதியை ஒரே நொடியில் நேர் செய்துகொண்டிருக்க முடியும். பெரியாரே அதற்குத் தடைக் கல்லாக இருந்துவந்தார்-இருந்தும் வருகிறார். ஆரியத்திலே பக்தி விஸ்வாசம் கொண்டிருக்கும் சூத்திரர்களால், தமது இழிவை உணர்ந்து

கொள்ளவும் முடியாது; அதனை இழிவாகக் கருதவும் மாட்டார்கள். சுயமரியாதைச் சுடரொளி வீசின காரணத்தால்தான், சென்னை ஓட்டலிலே காட்டப் பட்ட பேதத்தைக் கண்டு சகியாது, சட்டத்தை மீறின ஓட்டல் முதலாளியைக் குற்றவாளிக் கூண் டில் கொண்டுவந்து நிறுத்தினர், தன்மானத் தமிழர். பார்ப்பனர் தாள் ஏந்துவதே பிறவி எடுத்ததின் பெரும் பயன் என்று நம்பி இருக்கும் பாசி பிடித்த மதியினருக்கு, இதுபோன்ற ஓர் வாய்ப்பு நேர்ந்து இருக்குமானாலும், பேசாது இருந்து விடுவதோடு, ஓட் டல் முதலாளி சட்டத்தை மீற நடந்து கொண்டது தான் சுதர்மம் என்றும் பிதற்றி இருப்பார். உமா காந்தர்களுக்கும் இது உடன்பாடுதான்!

'ஜஸ்டிஸ் கட்சியை அழித்து விடாதீர்கள். அந்தக் கட்சி ஏற்பட்ட பின்னர்தான் பார்ப்பன ரல்லாதார்கள் எந்தக் கட்சியில் இருந்தாலும் அவர் களை மதிக்க ஆரம்பித்தார்கள் பார்ப்பனர்கள்' என்று கூறிவிட்டு, அதற்கு எடுத்துக் காட்டாகத் தனது தொடர்புடைய சம்பவம் ஒன்றையும் குறிப்பிட்டார் காலஞ்சென்ற ஒரு தேசபக்தர்.

"நான் சென்னை வந்தால் காலஞ்சென்ற கஸ்தூரிரங்க அய்யங்காரைக் காணாமல் போவது கிடையாது. என்னை அவர் கண்டதும் 'வாடா சிதம்பரம்' என்று அழைப்பார். நானும் அந்த 'வாடா'வை மிக்க மகிழ்வோடு ஏற்றுக்கொள்வேன்.

டாக்டர் நாயர் ஜஸ்டிஸ் கட்சியை ஆரம்பித்த பின்னர் சென்னை வந்து, எப்பொழுதும்போல் அய்யங்காரை சந்தித்தேன். முன்பெல்லாம் என்னை அழைப்பதுபோல் அழைக்காமல் புது மாதிரியாக அழைத்தார். அதனைக் கேட்டதும் நான் ஆச்சரியப்பட்டு விட்டேன். 'வாடா' போய்விட்டது. 'வாங்க, சிதம்பரம் பிள்ளைவாள்' என்பது அய்யங்கார் வாயில் இடம்பெற்றது. இந்த மாற்றத்திற்கு எது காரணம் என்று கருதுகிறீர்கள்? ஜஸ்டிஸ் கட்சியை ஆரம்பித்ததுதான். ஆகவே, அந்தக் கட்சியை, இந்த ஒன்றைக் கருதியாவது காப்பாற்றத் தவறி விடாதீர்கள்'! என்றார் கப்பலோட்டிய வ. உ. சிதம்பரம், கண்களில் நீர்ததும்ப. சென்னையில் அவர் பேசிய கடைசிக் கூட்டம் அதுதான். கூட்டத்தின் தலைவர் டாக்டர் வரதராஜுலு நாயுடு. அவரைக் கேட்டால் இதன் உண்மை தெரியும்.

கணக்கு வழக்கை எல்லாம் சரியாகத்தான் வைத்திருக்கிறார் பெரியார். ஆற்றில் கொட்டினாலும் அளந்து கொட்டும் பண்புடையவர் பெரியார். இதனைத் தெரிந்து கொள்ளாமல் கணக்கு தயாராகட்டும் என்கிறதே இந்தக் குக்கல்!

மதித்தலைவர் பெரியாரைத் தூற்றித் திரிவதை இத்துடனாவது நிறுத்திக் கொள்ளட்டும். கருஞ்சட்டைப் படை இடம் கைவரிசையைக் காட்ட வேண்டாம். தலை ஊறுகிறது என்பதற்காகக்

கொள்ளியையா தேடுவார்கள் சொரிந்துகொள்ள? சொரி பிடித்த குக்கல் குப்பைமேட்டோடு இருந்து விட்டால், அதன்மீது யாரும் கல்வீசி விளையாட மாட்டார்கள். பலர் நடமாடும் வீதிவழி வந்தால்—அத்துடன் வெறிகொண்டு கடிக்கவும் முயன்றால்—அதற்குத் தகுந்த பரிசு கிடைக்காமலா போகும்!

காஞ்சி - கல்யாணசுந்தரன்

எழுதியது

அஞ்சா நெஞ்சன் அழகிரிசாமி

விலை அணா 8.

812

S. குருசாமி

விடுதலை ஆசிரியர்

எழுதியது

திருப்பதி மொட்டை

விலை அணா 6.

அறிவுப் பண்ணையில் கிடைக்கும்

தில்லை - வில்லாளன்

தீட்டியவை :

சாவோலை (இரண்டாம் பதிப்பு)	விலை ரூ.	0 8 0
முதல் விசாரணை (சிறந்த ஆராய்ச்சி நூல்)	,,	1 4 0
அதிகார போதை	,,	0 6 0
கடைசி நாள்	,,	0 5 0
கதம்பம்	,,	0 8 0
காலேஜ் காதல்	,,	0 3 0

அடுத்து வெளிவருபவை :

அத்திப்பூக்கள் .... விலை ?

சாமக்குளம் .... விலை ?